சஸ்பெண்ட் செய்யப்பட்டால் மேற்படி பஸ் சொந்தக்காரர்களுக்குப் புதிய வழித்தடங்கள் கொடுக்கப்பட மாட்டாது. ஆனால் நாம் இப்போது முடிவு செய்திருப்பதன்படி இனி யாருக்கும் புதிய வழித்தடங்கள் கிடையாது. ஆகையால் அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. 75 ரூபாய் மட்டும் தான் அபராதம் வசூலிக்க முடியும். ஆகவே அவர்கள் அதைப்பற்றியும் கவலைப்படுவதாக இல்லை. இதை மாற்றி அமைக்கின்ற வகையிலே எத்தனைப் பயணிகளைக் கூடுதலாக ஏற்றிச் செல்கிறார்களோ அந்த அளவுக்கு 3 மாத காலத்திற்குக் கூடுதல் வாகன வரி விதிக்கலாமா? இல்லையென்றால் உடனடி யாக அந்தப் பஸ்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, முன்பெல்லாம் ஓவர்லோடு ஏற்றிச்சென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க போலிஸாருக்கு அதிகாரம் இருந்தது. இப்போது அவர்களுக்கு அந்த அதிகாரம் இல்லை என்று தெரிகிறது. ஆகவே மீண்டும் அவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்தக் கருத்து சரியானதல்ல. காவல் துறைக்கு அந்த அதிகாரம் இப்போதும் இருக் கிறது. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, இரண்டு முறை சஸ்பெண்ட் செய்யப்பட்டால் புதிய வழித்தடங்கள் கிடையாது என்ற நிலை முன்பு இருந்தது. இப்போது புதிய வழித்தடங்களே யாருக்கும் இல்லை என்ற நிலை இருப்பதால் அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருக்கிறார் கள்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, நம்முடைய நாட்டில் பெரியோர் களுக்குக் கடைசிக் காலத்தில், அவர்கள் நல்லது கெட்டது எதைக் கேட்டாலும் அவர்கள் உயிர் போவதற்கு முன்னால் அவைகளை வாங்கிக் கொடுப்பது நமது பழக்கம். அதைப்போல இந்த பஸ் முதலாளிகளுக்கும் அவர்கள் கடைசி காலத்தில் இருப்பதால் சில சலுகைகளை அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல பெரியோர்களுக்குச் செய்யலாம் ; ஆனால் இத்தகையோருக்கு அல்ல.

Marine Diesel Engine Factory.

* 513 *Q.*—THIRU N. DENNIS, THIRU A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up Marine Diesel Engine Factory in the State ; and

(*b*) if so, the details thereof ?

1973 மார்ச் 26]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆண்டு ஒன்றுக்கு 30–200 குதிரைத்திறன் கொண்ட 1,000 யான் மார் கப்பல் டீசல் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ இந்திய அரசிடமிருந்து இசைவுக்கடிதம் பெற்றுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். ஏற்கெனவே இந்த கேள்வித் தாளில் நமது கல்வித் துறை அமைச்சரவர்களும், அரிசன நல அமைச்சரவர்களும் வருவதாகவும் அவர்கள் பதிலளிப்பதாகவும் கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கே அவர்கள் இல்லை. அவர்கள் வருவார்களா அல்லது வராததற்கு காரணமென்ன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம். வருவதாகத்தான் தெரிகிறது. இன்று திங்கட்கிழமை அல்லவா! நேற்று ஊர் ஏதாவது போயிருப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

திரு. என். டென்னிஸ்: சார், அதன் "காப்பிட்டல் இன்வெஸ்ட்மெண்ட்" எவ்வளவு? தனிப்பட்டவர்களுக்கும் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இன்னும் அது பற்றி முடிவு செய்யப்படவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, குறிப்பு ஒன்று இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த இயந்திரத் தொழிற் சாலை எங்கே ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கெனவே திட்டமிட்டபடி எண்ணூரில் ஆரம்பிக்கலாம் என்று கருத்து இருந்தது. நாம் புதிதாக அனுமதி வாங்கியதற்கு பின்னாலே அது பற்றி முடிவு எடுக்கப்படவில்லை. சுமார் 3.6 கோடிக்கு வரலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், சென்னையில் உள்ள மெரைன் ரிப்பேர் ஒர்க்ஷாப் சில தனியாரிடத்தில் இருக்கிறது. கன்ஸ்டிரக்ஷன் ஷிப்பிங் சம்பந்தமாக அந்த தனியாரிடத்தில் போய்தான் சர்வீஸ் முதலியன செய்து வருகிறார்கள். அம்மாதிரியான ஒர்க்ஷாப் ஒன்றை இதனுடன் இணைத்து தொடங்க அரசுக்கு ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த இயந்திரங்கள் உற்பத்தி செய்வது பற்றிய திட்டம் வந்ததற்குப் பின்னாலே அப்படி ஒரு வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்று பரிசீலிக்கலாம்.

திரு. அ. தேவேந்திரன்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கிறபோது தமிழகத்திலேயே பின்தங்கிய மாவட்டமாக இருக்கும் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருக்கின்ற வசதிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு முடிவு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்பநாடார் : தலைவரவர்களே, இது எப்போது துவங்கப்படும், இதற்கு எவ்வளவு மூலதனம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஏற்கெனவே சொன்னேன். திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை. சுமார் 3.6 கோடி வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதிலே ஜப்பானிய தொழில் நுட்ப உதவி கிடைக்க வேண்டும் என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நான் ஜப்பானுக்குச்சென்று இருந்தபோது அந்த நிறுவனத்தாருடன் பேச்சு வார்த்தை நடத்தி விட்டு வந்தேன். மத்திய அரசாங்கம் அந்த ஜப்பானியத் தொழில் உதவி கிடைப்பதில் சில சங்கடங்கள் இருப்பதாகச் சொல்லி வருகிறார்கள். மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த இயந்திரத் தொழிற் சாலையில் 20 எச்.பி., 30 எச்.பி., இயந்திரங்கள் தயாரிக்கப்படுவதாகச் சொன்னார்கள். சிறு சிறு மீனவர்கள் இன்னும் குறைந்த விலையில், மலிவான விலையில் வாங்குவதற்கு வசதி செய்யும் பொருட்டு 10 எச்.பி. 15 எச்.பி. இயந்திரங்கள் நாங்கள் கொஞ்சம் மீன் பிடிக்க வசதியாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள்—தயாரிக்க அந்தத் தொழிற்சாலைக்கு அரசு யோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கும் திட்டப்படி 30லிருந்து 200 எச்.பி. வரை செய்யலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இவைகளும் தேவையென்றால் பரிசிலிப்பதில் தவறு இல்லை.

திரு. அ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, நாட்டில் இந்த இயந் திரங்களுக்கு அதிகம் தேவை இருப்பதால் அத்தொழிற்சாலை விரைவில் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது நீண்ட நாளைய கனவு என்று நினைக்கின்றேன். இப்போதுதான் அனுமதி பெற்று இருக்கிறோம். தொழில் நுட்ப அறிவு விரைவில் வந்து விடுமானால் அந்தத் தொழிற்சாலையை விரைவில் ஆரம்பித்து விடலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது ஜப்பான் நாட்டினரின் தொழில் நுட்ப ஆலோசனை தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் அதில் பாரின் கொலாபரேஷன் ஏதாவது இருக்கிறதா அல்லது அரசே அதை ஏற்று நடத்த இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்,

1973 மார்ச் 26]

மாண்புமிகு திரு செ. மாதவன்: ஜப்பானியத் தொழில் நுட்ப அறிவு தேவை, "டெக்னிகல் நோஹௌ தேவை என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அது பற்றிப் பேச்சு வார்த்தை இப்போது நடைபெற்று வருகிறது.

Advertisement for Arasu Cement.

* 514—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state the expenditure incurred for the advertisement of Tamil Nadu Arasu Cement given in the All India Radio for the calendar years 1971 and 1972 ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: ரூ. 29,536.25.

திரு என். டென்னிஸ்: தலைவரவர்களே, இதன் மூலம் இதன் செலவு அதிகரித்து இருக்கிறதா? இல்லை உற்பத்தி பெருக வழி வகுத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: நம்முடைய சரக்குக்காக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. எதாவது வியாபாரத்தில் விளம்பரம் செய்தால் பயன் கிடைக்கும்.

திரு கா. வேழவேந்தன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது சிமெண்ட்டுக்கு விளம்பரம் செய்யாவிட்டாலும் வியாபாரம் இருக்கிறது. இப்படி தமிழ்நாடு சிமெண்ட் பற்றி வானொலியில் சொல்லப்படும் விளம் பரம் சுவையாக இருக்கிறது. 3 மாதத்திற்கு ஒரு முறை மாற்றி வேறு வேறு விதமான வகையில் விளம்பரம் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: சில நாட்கள் இந்த விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. சில மாதங்கள் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு இந்தத் தொகை செலவாகியிருக்கிறது. முன்னாலே நாம் உற்பத்தி தொடங்கிய போது அந்தக் கஷ்டம் இருந்தது. இப்போது மாண்புமிகு அங்கத்தினர் சொன்னது போல் அரசு சிமெண்ட்டுக்கு ஏராளமான கிராக்கி ஏற்பட்டுள்ளது.

திரு நா. வீராசாமி: மாண்புமிகு அமைச்சர் சொன்னது போல், இப்போது நிறைய கிராக்கி ஏற்பட்டு இருக்கிறது. எல்லாப் பக்கங்களிலும் இந்த சிமெண்ட் பற்றி மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை வாங்க வேண்டுமென்ற ஆவல் எல்லாப் பக்கங்களிலும்—கிராமப் புறங்களிலும் இருக்கிறது. ஆகவே, உற்பத்தியைப் பெருக்கி எல்லா மக்களுக்கும் சிமெண்ட் கிடைக்கும் வகையில் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிமெண்ட் உற்பத்தியில் எந்த விதமான தடையும் கிடையாது. வெளி